முக்கூடற்பள்ளுவில் இயற்கையும் சுற்றுச்சூழலும்

க. அன்னபூரணி
முதுகலைத்தமிழ் இரண்டாமாண்டு
ராணி அண்ணா அரசு மகளிர் கல்லூரி, திருநெல்வேலி
DOI: https://doi.org/10.5281/zenodo.19220496

முன்னுரை

தமிழில் புதிது புதிதாக இலக்கியங்கள் தோன்றி கொண்டே இருக்கின்றன. பழையன கழிதலும் புதியன புகுதலும் என்பதற்கு ஏற்ப வேந்தர்களையும் வள்ளல்களையும் இறைவனின் சிறப்பை எடுத்துரைத்த பேரிலக்கியங்கள் சிற்றிலக்கியங்களாகத் தோற்றம் பெற தொடங்கின. சிற்றிலக்கியங்கள் இறைவனை அல்லது மக்களில் சிறந்தவரை பாட்டுடைத் தலைவனாக கொண்டு இலக்கியங்கள் படைக்கப்பட்டன. சிற்றிலக்கியங்களில் ஒன்றான பள்ளு இலக்கியமானது பள்ளத்தில் பயிர் செய்யும் மருத நில மக்களின் வாழ்வியலை பதிவு செய்யும் இலக்கியமாக திகழ்கின்றது. அவற்றுள் முக்கூடற்பள்ளு அக்காலத்தின் செழிப்பான நீர் வளம், நிலவளம், பயிர் வகைகள், கால்நடைகள் பற்றியும் அவர்கள் எவ்வாறு இயற்கையோடு இணைந்து வாழ்ந்தார்கள் என்பதையும் பதிவு செய்கிறது. முக்கூடற்பள்ளு சிறந்த இயற்கை ஆவணமாகத் திகழ்வதை இக்கட்டுரை வாயிலாக காணலாம்.

இயற்கையும் சுற்றுச்சூழலும்

இயற்கை என்பது இயல்பானது. மனிதனின் முயற்சி இல்லாமல் இயல்பாக கிடைப்பது இயற்கை எனலாம்.சுநிலம் தேநீர் வளி விசும்பொடு ஐந்தும் கலந்த மயக்கம் உலகம்' என்ற தொல்காப்பியர் வரிகளுக்கு ஏற்ப இவ்வுலகம் ஐம்பூதங்களால் ஆனது. நாம் உண்ணும் உணவு, சுவாசிக்கும் காற்று, பருகும் நீர், இருக்கும் இடம் இவையெல்லாம் இயற்கையின் கொடை. "மண் திணிந்த நிலமும் நிலன் ஏங்கிய விசும்பும் விசும்பு எஞ்சிய வழியும் வழித்தலைஇய தீயும் தீ முரணிய நீரும் என்றாங்கு ஐம்பூதத்து இயற்கை போல' மனிதன் உயிர் வாழ இவ்வைந்தும் தேவைப்படுகிறது. நீரின் சிறப்பை, "நீரின்றி அமையாது உலகு'க என்ற திருவள்ளுவர் வரிகள் மூலம் அறிய முடிகிறது. இயற்கையின் சிறப்பை இலக்கியங்கள் பலவாறு புகழ்கின்றன. சிலம்பில்" ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும் என்றும்" வான்சிறப்பு என்று தனி அதிகாரத்தை வள்ளுவரும் குறிப்பிடுகிறார்

சுற்றுச்சூழல் என்பது நம்மைச் சுற்றியுள்ள உயிருள்ள மற்றும் உயிரற்ற காரணிகளை குறிக்கிறது. பண்டைய தமிழர்கள் நிலத்தை ஐந்தாக பிரித்தனர். அத்தன்மைக்கேற்ப முதல், கரு, உரிப் பொருட்களைவகைப்படுத்தினர். அவற்றுள் கருப்பொருட்களைத் தம் வாழ்வாதாரங்களாகக் கொண்டு வாழ்ந்து வந்தனர். "நும்மினும் சிறந்தது நுவ்வை" என மரத்தை உறவாகப் பார்த்தனர் என்பதை நற்றினை வரிகள் மூலம் அறிய முடிகிறது. இயற்கைக்கும் உயிரினங்களுக்கும் உரிய நுணுக்கமான பிணைப்பைக் "கொங்குதேர் வாழ்க்கை அம்சிறைத் தும்பிதி என்ற குறுந்தொகை பாடல் பதிவு செய்கிறது முக்கூடற்பள்ளு போன்ற சிற்றிலக்கியங்கள் ஒரு குறிப்பிட்ட நிலப் பகுதியின் நீர்வளம், மண்வளம், கால்நடைகள், உயிரினங்கள்

பற்றி நுணுக்கமாக பதிவு செய்துள்ளதை நம்மால் அறிய முடிகிறது.

முக்கூடற்பள்ளு

நெல்லு வகை எண்ணினாலும் பள்ளு வகையை எண்ண முடியாது என்பர். எண்ணற்ற பள்ளு இலக்கியங்கள் உள்ளன. முக்கூடற்பள்ளு முதலில் தோன்றிய பள்ளு இலக்கியம் ஆகும். பொருநைநதி, சித்ரா நதி, கோதண்டராம நதி மூன்றும் சங்கமிக்கும் இடமான முக்கூடல் பற்றி குறிப்பிடுகிறது. இந்நூல் அங்கு வயலில் வேலைசெய்யும்குடும்பன்அவனதுஇரண்டு மனைவிகளான மூத்த பள்ளி, இளைய பள்ளி, பண்ணைக்காரன் போன்றோர்களின் வாயிலாக அவர்களது ஊரின் இயற்கை வளம், கால்நடைபராமரிப்புபோன்றவற்றைஅறிய முடிகிறது. முக்கூடற்பள்ளுவில் நெல் வகைகள், மாட்டு வகைகள் பலவற்றின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளது.

இரு பள்ளியர்களுக்கு இடையே நடக்கும் சண்டையில் அவர்களின் நாட்டின் வளம், இயற்கை வளம், தொழில் வளம் ஆகியவை அறிய முடிகிறது. அவர்களது முக்கியத் தொழிலாக உழவுத் தொழில் காட்டப்படுகிறது. அம்மக்களிடையே சைவ, வைணவம் என இரு சமயங்களை வழிபடுவதையும் மழைவேண்டுதலையும் காணமுடிகிறது

இயற்கை வளம்

இயற்கை என்பது மரம் செடி கொடி நீர்நிலைகள் விலங்குகள் என்பனவாம் இவை முக்கூடற்பள்ளு எவ்வாறு பயின்று வந்துள்ளது என்பதை பின்வருமாறு காணலாம்" சங்க மேடைகள் எங்கும் உலாவும் தரங்க மீன் பொன் அரங்கிட தாவும்'தீ என்று மீன்கள் செழிப்பையும்,

"சுரும்புப்பாடி இரும்பு உருக்கும்
தடத்து வாளை குடத்தை நெருக்கும்'து

என்ற வரிகளில் சோலைகளில் நிறைந்த மலர்கள் இருப்பதையும் மீன்கள் செழித்து இருப்பதையும் அறிய முடிகிற. "பலாக்கனி வாழை உளுக்கவே சுமந்து ஒண் குலை சாய்க்கும் மாதுளம் கொம்பு வாழையைத் தாங்கும்' தூஇதன் மூலம் தென்னை கமுகு மாமரம் பலாமரம் வாழைமரம் செழித்து இருந்ததை அறிய முடிகிறது.

"காய் கதிர் செந்நெல் செந்நெல்லு மப்பால் செங்கரும்புக்கு கை தரும்'ணீ என்ற வரிகள் செங்கரும்பு செந்நெல் இஞ்சி தாமரை விளைந்திருப்பதைக் காட்டுகிறது.

மழைக்காக வேண்டுவதால் மழை பெய்வதற்கான அறிகுறிகளாக நீர் படு சொறி தவளை கூப்பிடுகுதே சேற்று நண்டு சேற்றில் வளை ஏற்ற அடைக்குதே' என்று குறிப்பிடுகிறது. அவ்வாறு வெள்ளம் வரும்போது குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை நிலங்களில் உள்ள வளங்களை அடித்து கடலில் சேர்க்கிறது. இதில் காட்டு மல்லிகை கொடி, கடம்ப மரம், மூங் கில்இகள் ளிஇ கொன்றை, கரும்பு, நெய்தல் பூக்கள் எல்லாம் கடலில் சேர்த்தது என்று கூறுவதில் இருந்து அங்குள்ள மரம் செடிகளை அறிய முடிகிறது.

உழவுத் தொழில்

சுழன்று ஏர் பின்னது உலகம் என்பதற்கு ஏற்ப உழவுத் தொழில் முக்கிய தொழிலாக முக்கூடற்பள்ளுவில் காட்டப்பட்டுள்ளது.

"சித்திர காளி வாலான் சிறை மீட்டான் மணல் வாரி செஞ்சம்பா கருஞ்சூரை சீரகச் சம்பா முத்து விளங்கி மலைமுண்டன் பொற்பாலை நெடு மூக்கன் அரிக்காவி மூங்கிற் சம்பா கஸ்தூரிவாணன் காடை கழுத்தன் இரங்கல் மீட்டான் கல் உண்டை பூமாலை பார்கடுக்கண் வெள்ளை புதல், கருங்குருவை புனுகுச் சம்பாவும்' என்ற வரிகள் வேளாண்மையை நுட்பமான திறத்துடன் நடந்துள்ளதுஎன்பதை அறிய முடிகிறது. விதை நெல்லை நல்ல நாள் பார்த்து வயலை

கூடி உழுது விதைத்து தெளித்து நாற்று நட்டனர் இதன் மூலம் வேளாண் உற்பத்திக்காக பார்த்து பக்குவமாக செய்தனர் என்று அறிய முடிகிறது. இதற்காக பயன்படுத்தப்பட்ட மாட்டு வகைகளாக, "குடைக்கொம்பன் செம்மரயன் குத்து குளம்பன் மூளை குடைச்செழியன்குற்றாலம்கூடுக்கொம்பன் மடப்புள்ளை கருப்போரான் மயிலை சுழற்சிக்கண்ணன் மட்டைக் கொம்பன் கருப்பன் மஞ்சள்வாலன் படைப்பு பிடுங்கி கொட்டைப்பாக்கம் கரு மறையன் பசுங்காத்தான் அணில் காளான் படலைக் கொம்பன் விடத்தலை புண் இருந்தால் வெள்ளை காலையும் இந்த விதத்தில் உண்டு ஆயிரம் தான் மெய் கான் ஆண்டே 'P முக்கூடற்பள்ளு குறிப்பிடுகிறது

பள்ளு இலக்கியங்களில் மக்கள் வாழ்க்கை இயற்கையோடு சேர்ந்து வாழ்ந்தனர் அதனால் தான் அவர்கள் சுற்றுச்சூழலை கூறும் போது கூட அதனை தன் வாழ்வோடு சேர்த்து கூறுவதை பார்க்க முடிகிறது "தத்தும் பாய் புனல் முத்தம் அடைக்கும் சாலை வாய் கண்ணல் ஆளை உடைக்கும் கத்தும் பேரிகைச் சத்தம் புடைக்கும் களிப்பு வேலை ஒலிப்பை துடைக்கும் 't முத்துக்கள் கால்வாய்கள் சென்று அடைக்கும் அளவுக்கு உள்ளது என்றும் தொழிற்சாலைகளின் ஒலி புடைக்கும் மற்றும் எல்லா பொருளும் கிடைக்கும் இடம் என்பதிலிருந்து ஊரானது எல்லா வளங்களையும் பெற்றிருப்பதை அறிய முடிகிறது "சாதி நாள் வளம் நீதி பெருகும்'த என்பதிலிருந்து அனைவரும் ஒற்றுமையாக இருந்தார்கள் என்பதை அறிய முடிகிறது. "கறைப்பட்டுள்ளது வெண்கல திங்கள் கடம் பட்டுள்ளது கம்பத்து வேழம்தி என்ற வரிகள் மூலம் மக்கள் என்றும் துன்பத்தில் உலழவில்லை என்பதை மறைமுகமாக உணர்த்துகிறது. அவர்களது ஊரின் அமைப்பினை பற்றி "கொண்டல் கோபுரம் அண்டையில் கூடும் கொடிகள் வானம் படித்தரமோடும் கண்டம் பேரண்டம் தந்தலை நாளும் கனகமுன்றில் அன்னம் விளையாடும் விண்ட பூமது வண்டலித்தோடும் வெயில் வெய்யோன் பொன்னெயில் வழி தேடும் அண்ட நாயகர் சென்டர் அலங்காரர் அழகர் முக்கூடல் ஊர் எங்கள் ஊரே 'w சூரியனும் உள்ளே செல்ல வழி தேடும் அளவிற்கு உயர்ந்த சுவர்களை உடைய கோயிலை உடையது என்று குறிப்பிடப்படுகிறது "மைக் கடல் முத்து கீடாய் மிக்க நெல் முத்து உண்டாக்கும் என்ற வரிகள் கடல் முத்துக்கு இணையான நெல்மணிகள் உருவாக்குபவர்கள் என்று கூறப்படுகிறது அதற்கு பயன்படுத்தப்படும் கருவிகளாக மண்வெட்டி, ஏர், உழக்கோல் போன்றவை குறிப்பிடப்படுவதன் மூலம் கருவி செய்யும் தொழில் இருந்ததையும் அறிய முடிகிறது.

ஜோதிடம் கணித்த நாளில் நடவு செய்தான் என்ற செய்தி மூலம் கணித்தல் தொழில் உள்ளதையும் அறிய முடிகிறது. உழவுத் தொழிலோடு இரண்டற கலந்தவை கால்நடைகள் இடையர்கள் கிடைமறித்து ஆடுகள் மாடுகள் சாணத்தை எருவாக பயன்படுத்திய செய்தியை "இடையரைக் கொண்டு வயலில் ஏவி என்ற பாடலால் அறிய முடிகிறது இவ்வாறு பல்வேறு மக்களும் ஒன்றாக இயற்கை சூழலுடன் வாழ்ந்தனர் என்பதை முக்கூடற்பள்ளு வழியாக அறிய முடிகிறது.

தொகுப்புரை

முக்கூடற் பள்ளுவில் உழவர்களின் வாழ்வியலையும், இயற்கையையும் இணைத்தே வாழ்ந்த நிலையை அறிய முடிகிறது. நெல் வித்துக்கள் பயிரிடுதல், சாண எரு பயன்படுத்துதல், ஏர்கால்கள் போன்றவை பயன்படுத்தப்பட்டமையும் மாடுகள் கொண்டு உழுத செய்தியும் முக்கூடற்பள்ளுவில் காட்டப்பட்டுள்ளது. இயற்கையை மனிதர்கள் கொண்டாட வேண்டும் என்றும் இயற்கை இன்றி இயக்கம் இல்லை என்பதும்

முக்கூடற் பள்ளு விளக்குவதைக் காண முடிகிறது.

அடிக்குறிப்புகள்

1. தொல்காப்பியம் மரபியல் 96
2. புறநானூறு 2
3. திருக்குறள் 13
4. சிலப்பதிகாரம் மங்கள வாழ்த்து வரி 4
5. நற்றிணை 172
6. குறுந்தொகை 2
7. முக்கூடற்பள்ளு 21
8. மேலது 24
9. மேலது 26
10. மேலது 27
11. மேலது 36
12. மேலது 109
13. மேலது 110
14. மேலது 25
15. மேலது 24
16. மேலது 22
17. மேலது 20
18. மேலது 16
19. மேலது 85

துணைநூற்பட்டியல்

1. தொல்காப்பியம், பொருள்திகாரம், திருஞானசம்பந்தம் ச.
2. புறநானூறு புலியூர்க்கேசிகன்.
3. நற்றிணைபாலையன் அ ப.
4. குறுந்தொகை, புலியூர்க்கேசிகன்
5. முக்கூடற்பள்ளு புலியூர்க்கேசிகன்.